3556

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி--௪௪.] விய-ஆண்டு மாசி—பங்குனி-மீ [பகுதி. ௪, ௫.
Vol. 44. February—April 1947. No. 4, 5.

செந்தமிழ்

செந்தமிழ் என்பது செம்மையாகிய தமிழ் என விரியும். செம்மையென்னும் அடைமொழி தமிழை விசேடித்துக் கொடுந்தமிழன்மை தெரித்துநின்றது. செம்மையாவது:—நேர்மையும் தூய்மையும் உடைமை. நேர்மையென்பது இலக்கணவரம்புடைமையையும் தூய்மையென்பது வழுவின்மையையும் உணர்த்தும். வழு - குற்றம். எனவே, இலக்கணவரம்பும் தூய்மையும் உடையதாகியியல்வதே செந்தமிழ் எனப்படும்.

இச்செந்தமிழ் வழங்கியநாடே செந்தமிழ்நாடு எனப்படும். செந்தமிழ்நாடு இதுவென்பதைச்

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநா டென்ப"

என்னுஞ் செய்யுளான் அறிந்துகொள்க. செந்தமிழ்முனியென்றது அகத்தியனை. செந்தமிழ்நாட்டிற்கெல்லை வேறுகூறுவாரும் உளரேனும், அகத்தியர் இலக்கணநூல்செய்தும் சங்கம்நிறுவியும் செந்தமிழை வளர்த்தநாடு பாண்டிநாடேயாதலின் பாண்டிநாடென்பதே பொருத்தமாதல் காண்க. பாண்டிநாட்டுள்ளும் முதற்சங்கமிருந்த நிலமே செந்தமிழ்நிலமென்பாரும் உளர். அகத்தியர் சங்கம்நிறுவித் தமிழை வளர்த்த நாடு பாண்டிநாடென்பது, வான்மீகியார்

செய்த வடமொழியிராமாயணத்துள்ளும், தமிழ் இராமாவதாரத்துள்ளும் கூறப்படுதலானும் அறியப்படும். முதற்சங்கம் முதலிய முச்சங்கமும் பாண்டிநாட்டிலிருந்தமைநோக்கியே, ஸ்ரீமான். போன் பாண்டித்துரைத்தேவரவர்களும் நான்காஞ்சங்கத்தையும் பாண்டி நாட்டிலேயே நிறுவியதுமென்க.

செந்தமிழ்நிலமாகிய பாண்டிநாடொழிந்த ஏனைநிலத்து வழங்கிய தமிழே கொடுந்தமிழ் எனப்படும். கொடுந்தமிழ் செந்தமிழுக்கெதிரியதாகலின் நேர்மையும் தூய்மையும் அற்ற தமிழ் கொடுந்தமிழ் எனப்படும்.

செந்தமிழ் கொடுந்தமிழ் என்பனவற்றைச் செங்கோல் கொடுங்கோல் என்பனபோலக் கொள்க. செந்தமிழ் என்பதற்குக் கற்றோர் வழுவின்றிக்கூறுஞ் செம்மையாகிய தமிழ் எனவும், அங்ஙனமன்றிக் கல்லாதார்கூறும் திரிபுடைய தமிழ் கொடுந்தமிழ் எனவும் கூறுவாரும் உளர். "வடவேங்கடந் தென்குமரி - ஆயிடைத், தமிழ் கூறும் நல்லுலகத்து" எனத் தமிழ்நிலத்திற் கெல்லைகூறிய தொல்காப்பியர், பின், 'செந்தமிழியற்கைசிவணியநிலம்' என்று வேறு பிரித்துக்கூறியதுமன்றி, 'இயற்கைசிவணிய' என விதந்துகூறலானும், கொடுந்தமிழைத் திசைச்சொல் என்றே கூறலானும் அது பொருந்துமோவென்பது ஆராயத்தக்கது. அது நிற்க.

கொடுந்தமிழ்நாடு இவை யென்பதை,

> "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
> பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
> சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
> ஏதமில் பன்னிருநாட் டெண்"

என்னுஞ் செய்யுளான் அறிக.

இக் கொடுந்தமிழ்நாடுகளிலிருந்து செந்தமிழ்நாட்டில் வந்து வழங்கிய சொற்களுள் ஏற்புடைய சொற்களையே திசைச்சொற்களாகக் கற்றுயர்ந்த சங்கச்சான்றோர்கள் செந்தமிழ்மொழியோடு சேர்த்துத் தம்பாட்டுரைநூல்களுள் வழங்கினார்கள் எனக்கொள்க. நூல் என்றது அக்காலத்து இலக்கணத்துக்கே வழங்கியது.

அதனைப் "பாட்டுரை நூலே" (செய்யுள்-எகூ) எனவரும் தொல்காப்பியச் சூத்திரத்தான் அறிந்துகொள்க. கொடுந்தமிழ்மொழிகளுள்ளும் ஏற்புடையவற்றையே சங்கச்சான்றோர்கள் திசைச்சொல்லாகக் கொண்டார்களன்றி, நன்னூலார்கொண்ட தமிழொழி பதினேழ்நிலத்துமொழிகளைத்தானும் திசைச்சொல்லாகக் கொண்டிலர். அஃதா,

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொல் லென்ப"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானும், கடைச்சங்கச்சான்றோர்கள்செய்த செய்யுள்களுள் அவை வாராமையானும் அறியப்படும். சிவஞானமுனிவரும் தாமெழுதிய இலக்கணவிளக்கச்சூறாவளி என்னும் உரைநூலுள் "தமிழொழி பதினேழ்நிலத்துமொழிகளையும், செந்தமிழ்நாட்டுமொழியோடொப்பத் திசைச்சொல்லாகக் கொண்டார்; ஆசிரியர் தொல்காப்பியர் அவ்வாறு கொள்ளாமையானும், உரையாசிரியர் சேனாவரையர் கூறாமையானும், வடசொற்போல ஏனைநிலத்துமொழிகள் சங்கச்சான்றோர்வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் வாராமையானும், சிலசொற்கள் இக்காலத்து வரினும் இலக்கணமுறையன்மையானும் அவை தமிழுக்குரிய திசைச்சொற்களாகா என மறுக்க" எனக் கூறுதல் காண்க.

சங்கச்சான்றோர்கள், தமிழொழி பதினேழ்நிலத்துமொழிகளைச் செந்தமிழ்மொழியோடு சேர்த்து வழங்காமைக்குக் காரணம் இலக்கணமரபும் செந்தமிழ்நலனும் கெடுமென்பதுபற்றியேயாம். நன்னூலார், பதினேழ்நிலத்துமொழிகளையும் திசைச்சொற்களாகக்கொண்டது பிற்காலத்தார்செய்த இலக்கியவழக்குநோக்கியேயாம். பிற்காலத்தார் அங்ஙனஞ் சேர்த்துவழங்கினும் செந்தமிழ்நலங்கெடாதபடி அரிதாகவே சேர்த்துவழங்கினர். ஆயினும் அங்ஙனஞ் சேர்த்து வழங்கியதும் இலக்கணமரபன்றென்பது, யாம் முற்காட்டிய சிவஞானமுனிவருரையான் உணரப்படும்; இலக்கணமரபன்றென்பதே தொல்காப்பியர்க்குங் கருத்தாதல்,

"மரபுநிலை திரிதல் செய்யு ளில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான"

என்றும்,

"மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்"

என்றும் அவர்கூறிய சூத்திரங்களான் அறிந்துகொள்க.

இனி, வடமொழியையும் சங்கச்சான்றோர்கள் தம் பாட்டுரைகளுள் அரிதாகவே சேர்த்துவழங்கினார்களன்றித் தாம் வேண்டியவாறெல்லாம் செந்தமிழ்நலங்கெடச் சேர்த்துவழங்கினார்களல்லர். வழங்குங்காலும் செந்தமிழ்ச்சொற்களோடொப்ப இலக்கணமரபு வழுவாதபடி திரியாதும் திரித்தும் இருமொழிக்கும் பொதுவெழுத்தானாக்கியே வழங்கினார்கள். அங்ஙனமாதலை,—

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்றும்,

"சிதைந்தன வரினு மியைந்தன வரையார்"

என்றும் தொல்காப்பியர் கூறிய சூத்திரங்களானும், நன்னூலார் கூறிய வடமொழியாக்கச்சூத்திரங்களானும் அறிந்துகொள்க.

இவ்வாறே வடமொழிகளைச் செந்தமிழ்மொழியோடொப்பப் பொதுவெழுத்தானாக்கியும், தாம் திசைச்சொல்லாகக்கொண்ட கொடுந்தமிழ்மொழியுள் ஏற்பனவற்றையேகொண்டும் சங்கச்சான்றோர்கள் தாமியற்றிய பாட்டுரைநூல்களுள் அரிதாகவே வழங்கினார்களன்றித் திசைச்சொற்களாகத் தமிழொழிபதினேழ்நிலத்து வேற்றுமொழிகளைத்தானும் வழங்கினார்களல்லர். அங்ஙனமாகவும், இக்காலத்துப் பாட்டுரைகளை இயற்றுவோருட் பெரும்பாலார்,

"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான்"

எனத் தொல்காப்பியர்கூறிய விதியையும் நோக்காது, தமிழ்நாட்டிலுள்ள கல்லாதமாந்தர் பேசும் வழுவமைந்தவழக்குமொழிகளையும் ஆங்கிலம் முதலிய வேற்றுநாட்டுமொழிகளையும் வேண்டியவாறெல்லாஞ் சேர்த்துத் தாம் இயற்றும் பாட்டுரைகளைச் செந்தமிழியல்பு கெட இயற்றுகின்றார்கள். அவ்வாறு அவர்கள் இயற்றுவதற்குக் காரணம் வேறுபலவுமுளவேனும், அவர்கள் சொல்லுங்காரணம் இலக்கணமரபைநோக்கிக் கற்றுயர்ந்த பண்டிதர்கள் இயற்றும் பாட்டுரைகள் கடினநடையவாகிக் கல்லாதார் உணரமுடியாதிருத்தலினாலே தமிழ்வளர்ச்சிக்குத் தடையாகின்றன என்பதும், காலத்திற்கேற்ப இலக்கணமரபைநோக்காது கல்லாதார் பேசும் வழக்குமொழிகளையும் ஆங்கிலமுதலிய வேற்றுநாட்டுமொழிகளையும் சேர்த்து யாவரும் உணரத்தக்க எளிதான நடையில் இயற்றின், அப்பாட்டுரைகள் தமிழ்வளர்ச்சிக்குத் தடையாகா என்பதும், தொல்காப்பியர்காலத்துப்போலன்றி, இக்காலத்திலே தமிழ்நாட்டிலே ஆங்கில முதலிய வேற்றுநாட்டுமொழிகளும் வடமொழியைப் போலப் பெரிதும் பயின்றுவருதலின், அவற்றையும் நன்னூலார் கூறியவாறு திசைச்சொல்லாகக்கொண்டு செந்தமிழ்மொழியோடு சேர்த்துப் பாட்டுரைகளை இயற்றுவதனால் இலக்கணமரபிற் கிழுக்கில்லை என்பதுமே.

காலத்திற்கேற்ப யாவரும் அறியத்தக்க எளிதானநடையில் இலக்கணமரபைநோக்கியும் பாட்டுரைகளை இயற்றலாமாதலானும், அவ்வாறே கற்றுயர்ந்த பண்டிதர்கள் பலர் இக்காலத்தும் இயற்றியிருத்தலினாலும் இப்பொழுதும் இயற்றிவருவதனாலும், இலக்கணமரபை நோக்காது எளிதானநடையில் இயற்றும் பாட்டுரைகளே தமிழ்வளர்ச்சிக்குத் தடையாகாதன என அவர்கள் கூறுவதும், பயிற்சிநோக்கி ஆங்கில முதலிய வேற்றுநாட்டுமொழிகளைத் திசைச்சொல்லாகக்கொண்டு வழங்குங்கால், வடமொழியைச் சங்கச்சான்றோர்கள் இருமொழிக்கும் பொதுவெழுத்தானாக்கி அரிதாக

வழங்கினாற்போல, வேற்றுநாட்டுமொழிகளையும் இருமொழிக்கும் பொதுவெழுத்தானாக்கல்கூடுமாயின் அவ்வாறே ஆக்கி அரிதாக வழங்கல்வேண்டுமன்றிப் பிறவாறுவழங்கல் கூடாதாகலானே ஆங்கிலமுதலிய வேற்றுநாட்டுமொழிகளையும் இசைச்சொல்லாகக் கொண்டு வழங்கலாமென்று அவர்கள் கூறுவதும் பொருத்தமிலவே யாம். ஆங்கில முதலிய வேற்றுநாட்டுமொழிகளை இருமொழிக்கும் பொதுவெழுத்தானாக்கல்கூடுமோ என்பது அறிஞர்கள் ஆராயத் தக்கது.

இனி, ஆங்கிலமுதலிய வேற்றுநாட்டுமொழிகளிலுள்ள நூல் களைத் தமிழில் மொழிபெயர்க்குங்காலும் இயன்றவரையில் தமிழ்ச் சொல்லானேயே மொழிபெயர்த்தல்வேண்டும். இருமொழியினும் பெரும்புலமையடைந்த பண்டிதர்கள் மொழிபெயர்க்கின் முழு தும் தமிழ்ச்சொல்லானேயே மொழிபெயர்க்கலாகும்.

இதுகாறும் கூறியவற்றை இந்நாள்காறும் செந்தமிழை இலக் கணமரபுகெடாமல் வளர்த்துவரும் மதுரைத் தமிழ்ச்சங்கப் புல வர்களும், செந்தமிழிற் பற்றுடைய ஏனைப்புலவர்களும் நன்கு நோக்கித் தம்முள் ஆராய்ந்து, கல்லாதமாந்தர்பேசும் வழூவமைந்த வழக்குமொழிகளும் ஆங்கிலமுதலிய வேற்றுநாட்டுமொழிகளும் விரவிச் செந்தமிழின் இயல்பைக் கெடாதபடி செந்தமிழை வளர்த் தற்கேற்ற வழியைச் செய்வார்களாக. செய்யாதொழியிற் பிற் காலத்திலே செந்தமிழ்மொழிகள் அருகிவிடும் என்பதையும் அவர்கள் சிந்திப்பார்களாக.

சி. கணேசையர்.

ஸ்ரீ:

திருப்பதிக்கோவை

வித்வான், ரே. இராமையங்கார், தலைமைத்தமிழாசிரியர்,

ஸௌராஷ்ட்ரகலாசாலை, மதுரை.

முன்பு யான் செந்தமிழில் வெளியிட்ட சில சிறுநூல்களைப் போலத் திருப்பதிக்கோவையென்னும் இதுவும், மாட்சிதங்கிய தஞ்சை ஸரபோஜிமன்னரது ஸரஸ்வதிமஹால் நூல்நிலையத்திலிருந்து பிரதிசெய்யப்பட்டது. இது, திருமால் கோயில்கொண்டருளும் திருவரங்கம் முதலிய திருப்பதிகள் நூற்றெட்டினையும் கோவைப்படுத்திக் கூறுவது.*

இச்சிறுநூல், "மலையிட்டதீபமென மால்சமயத்தைத மண்மேல், நிலையிட்ட பூதூரெதிராசர்" என்று பாவலர் பாராட்டும் அருட்பெருங்கடலாகிய இராமாநுசமுனிவர்தம் தலைமைச்சீடர்களுள் ஒருவரும், அப்பேராசிரியர்பக்கல் தமக்குள்ள ஈடுபாட்டினை "இராமாநுசநூற்றந்தாதி" என்னும் திட்பநுட்பஞ்செறிந்த அழகிய நூலால் வெளியிட்டு அவர்தம் பேரன்புக்கிலக்கான பெருநாவலருமாகிய "திருவரங்கத்தமுதனார்" என்னும் பெரியாரால் இயற்றப்பட்டது. இவ்விஷயம், எட்டுப்பிரதிகளில் "திருவரங்கத்தமுதனார்

---

* இப்பெயரோடு வேறு சில நூல்களும் உள்ளன. அவை, (1) திருமால் பதிகள் ஒவ்வொன்றின் மூர்த்தி தீர்த்தம் முதலிய அமைதிகளைப் பெரும்பாலும் ஒவ்வொரு விருத்தப்பாவினால் விவரிப்பது; 130 செய்யுட்களுடையது. (2) ஆழ்வார்கள் அருளிச்செயற்சொற்றொடர்களைக்கொண்டே திருமால் பதிகளை அடைவுபடுத்திக்கூறும் அருளிச்செயல் திருப்பதிக்கோவை. (3) மாறனகப்பொருளுக்கு இலக்கியமான திருப்பதிக்கோவை; இது, அகப்பொருள் பற்றிய கோவைநூல்; காரிரத்தின கவிராயரால் இயற்றப்பட்டது. (4) சிவதலங்களை அடைவுபடுத்திக்கூறும் திருப்பதிக்கோவை முதலியனவாகும்.

திருப்பதிக்கோவை என்று குறிக்கப்பட்டிருத்தலாலும், தனியனுக நூலின் முதலில் அமைந்துள்ள வெண்பாவில் "மூங்கிற்குடியமுதன் மூத்தமிழா—னீங்காத, அன்பர்தமர்வாழ வருள்செய்த வந்தணர்கோன்" என வருதலாலும் இனிதுவிளங்கும். அன்றியும், முன்பு செந்தமிழில் வெளிவந்த பழமையும் பெருமையும் வாய்ந்த செய்யுள் நூலாகிய "குருபரம்பரை" என்ற நூலில் திருவரங்கத்தமுதனார் செயல்களைக் குறிப்பிடும் பகுதியில்,

> "ஆங்கவன் றமிழ்வே தங்க
> ளனைத்தையும் வடித்த சாரத்
> தோங்கிய நூற்றந் தாதி
> யுரைத்தன னுலக முய்யப்
> பாங்கினூற் றெட்ட தான
> திருப்பதி யடைவும் பாடித்
> தேங்கமழ் பொழில்சூழ் பூதூர்த்
> தேவனார் கழற்கீழ் வாழ்ந்தான்"
>
> (எம்பெருமானார்வைபவம்—775.)

என வருதலும் இதனை நன்கு வலியுறுத்தும்.

இந்நூல் சிறிதாயினும் இதில் ஏற்பட்டுள்ள பாடபேதங்கள் இதன் பழமையை நன்கு புலப்படுத்தும். இதுவரை அச்சேறாத இந்நூல் இதன் ஆசிரியர்பெருமைகருதியும் திருமால் திருப்பதிகளை ஒருங்கே அநுசந்தித்துப் பேறுற விரும்புவார்க்குப் பெரிதும் பயன்படுதல்கருதியும் செந்தமிழில் வெளியிடப்படுகிறது.

இதனுள், நடுநாட்டுத்திருப்பதியிரண்டும் தொண்டைநாட்டுத் திருப்பதிகளுடன் சேர்த்தெண்ணப்பட்டன. கச்சிப் பவளவண்ணம் என்பது தனியே விதந்து கூறப்படவில்லை; கச்சியுள் அடக்கிக்கூறப் பட்டதுபோலும். வடநாட்டுத்திருப்பதிகளுடன் திருநாட்டுத் திருப்பதியும் சேர்த்துக்கூறப்பட்டது.

ஸ்ரீ:

திருவரங்கத்தமுதனார் (அருளிச்செய்த)

திருப்பதிக்கோவை

ஓங்குந் திருவரங்கர் தாமுகந்த வொண்பதிகள்
மூங்கிற் குடியமுதன் முத்தமிழா—னீங்காத
அன்பர்தமர் வாழ வருள்செய்த அந்தணர்கோன்
தன்பதுமத் தாளே சரண்.

1 பங்கயத் தோணிக்கு வாகுவுக்குப் பண்டளிப்பப்
பொங்கு மயோத்திப் புரிசைநகர்—தங்கிச்
2 சிலநா ளினிதமர்ந்து தென்னிலங்கைக் கோமான்
குலம்வாழக் கொண்டேகும் வேலை—நலமார்ந்த
3 சென்னி வளவன் வளநாட்டுத் தெய்வநதிப்
பொன்னி நடுவுட் புளினத்துப்—பன்னரிய
4 இந்து மடுக்கரைக்கே யின்பமுற [1]வைத்தருளிச்
சந்தி செயக்கருதிச் சாருங்கால்—[2]முந்து
5 மருவார் பொழிற்குருகை மாறன்முத லானோர்
[3]திருவாய் மொழிச்சுருதிச் *செய்யுள்—குருகா
6 [4]யிரங்கா வெனயிரங்கா [5]யானிவனே வைகல்
வரந்தா வெனவிசைய மாற்றிப்—பரந்தாமன்
7 கோழி மயிலுடனே கோளரவின்மீ தேறி
யூழி பயிலு முயோகுதுயில்—வாழி
8 திருவரங்கங் கோயில் திருவாழ் உறந்தை
தருவலரும் பூஞ்சோலைத் தஞ்சை—[6]அருள்கலந்த
9 அன்பில் கரம்பனூர் அம்பொன்மதிள் வெள்ளறை
தென்புள்ளம்பூதங்குடி திருப்பேர்—அன்பால்
10 [7]அருந்தவர்சேர் ஆதனூர் ஆதி அழுந்தூர்
திருந்து சிறுபுலியூர் சேறை—பொருந்து

[பிரதிபேதம்] [1] வைத்து. [2] முந்தி. [3] திருவாய்மலர்சுருதிச். [4] யரங்கா வென யிரங்காய். [5] யானிவனே. [6] முருகலர்ந்த. [7] அருந்தவஞ்செயாதனூர். * கண்ணி 5, 6-ல் "செய்யுட் - குருகா அரங்க ரவன்பாங்கர் யானிவனே வைக, வரந்தா வெனவிசைய மற்றப் - பரந்தாமன்" என்றிருந்த பாடமே பின் மூலத்திலும் பிரதிபேதத்திலுமுள்ளபடி மாறிப் பிழைபட்டதென்று தோன்றுகிறது. ப-ர்.

11 தலைச்சங்கநாண்மதியம் தண்டடங்க ளெங்குங்
குலைத்தெங்கு சூழ்[1]தென் குடந்தை—நலத்தபுகழ்க்
12 கண்டியூர் விண்ணகரம் கண்ணபுரம் கோயில்
எண்டிசையு மேத்து மெழில்ஆலி—தெண்டிரைசூழ்
13 நாகை திருநறையூர் நந்திபுரவிண்ணகரம்
ஈகை மறவாத இந்தளூர்—[2]யோகமணிச்
14 சித்திரகூடம் காழிச்சீராமவிண்ணகரம்
கொத்தலரும் பூஞ்சோலைக் கூடலூர்—முத்திதரும்
15 கண்ணங்குடி கண்ணமங்கை [3]கவித்தலம்
திண்ணம் திரு[4]வெள்ளி யங்குடி—எண்ணரிய
16 [5]நாங்கூர்மணிமாடக்கோயில் நவையறுசீர்ப்
பூங்காவளம்பாடி [6]வண்புருடை—[7]தேங்குபுனற்
17 செம்பொன்செய்கோயில் திருத்தெற்றி[8]யம்பலம்
[9]வம்புந்து வைகுந்தவிண்ணகரம்—உம்பர்
18 அரிமேயவிண்ணகரம் அம்பொன்மணிக்கூடம்
பரன்மேவிய பார்த்தன்பள்ளி—[10]தருமாய்கை
19 [11]வெல்லுந் திருத்தேவனூர்தொகை[12]வெள்ளக்குளம்
வள்ளல் வழுதிவள[13]நாட்டுக்—தெய்வத்
20 திருமாலிருஞ்சோலை தென்கோட்டி மெய்யம்
தருவாரும் புல்லாணி தண்கால்—திருமோகூர்
21 கூடல் அணி வில்லிபுத்தூர் [14]கோலத் திருக்குருகூர்
தோடார் தொலைவில்லி[15]மங்கலம்—மாடலருஞ்
22 சிவரமங்கைப்பதி [16]தென்றிருப்பேர் சீர்வைகுந்தம்
பூவிலய னேத்தும் [17]புளிங்குடி—நாவில்
23 வளர்ந்த புகழ்சேர் வரகுணமங்கை
குளந்தை குறுங்குடி தென் கோளூர்—விளங்கு
24 மலைநாட்டனந்தபுரம் வண்பரிசாரம் சொற்
கலை[18]நாட்டுங் காட்கரை தென் மூழி—சிலைநாட்டுத்

[பி-ம்.] 1 தண்குடந்தை. 2 யோகுமலி. 3 கவித்தலமே. 4 வெள்ளியங்குடியே. 5 நாங்கை. 6 வண்புருடம். 7 தேங்குபுகழ்ச். 8 யம்பலமே. 9 வம்புந்தும். 10 திருமுட்டம். 11 விள்ளுந். 12 வெள்ளக்குளமே. 13 நாட்டிற் - செல்வத். 14 கோதில். 15 மங்கலமே. 16 தென்றிருப்பேர் வைகுந்தம். 17 புளிங்குடியே. 18 நாட்டுக்.

25 தென்குட்ட [1]நாட்டுத் திருப்புலியூர் செங்குன்றூர்
பொன்குட்ட வாவிப் புகழ்நாவாய்—அன்புற்ற
26 வல்லவாழ் மன்னு திருவண்வண்டூர் வாட்டாறு
[2]வில்லிவா ழும்புரிசை [3]வித்துவக்கோடு—அல்லல்
27 அறுக்குங் கடித்தானம் ஆறன்விளை சீர்
பொறுக்கும் புகழ்த் தொண்டைநாட்டில்—எறிக்கும்
28 [4]அயிந்த்ரபுரம் கோவலூர் அம்பொன்மதிட் கச்சி
வியன்திரு அத்தியூர் வெஃகா—குயின்ற
29 பரமேசவிண்ணகரம் பாடகம் மாடத்
திரண்மேய சீர்த்திருத் தண்கா—உரன்மேய
30 நீரகம் வேளுக்கை நிலாத்திங்கட்[5]டுண்டம் சொற்
காரகம் கார்வானம் கள்வனூர்—ஊரகமே
31 மட்டவிழுஞ் சோலைசூழ் எவ்வுள் மறை[6]பயிலும்
அட்டபுயகரமா மாதிநகர்—சிட்டர்தொழ
32 நின்றவூர் புட்குழி நீடுதிரு[7]நீர்மலை
என்று மழகார் இடவெந்தை—துன்று
33 கடன்மல்லை யம்பொற் [8]கடிகைச்சிலம்பு
[9]திடமாந் திருவல்லிக்கேணி—வடவெல்லை
34 வேங்கடம் சாளக்கிராமம் [10]வியன்புரிசை
[11]நாங்காணிசேர் நயிமிசாரணியம்—தேங்கு[12]புகழ்க்
35 கங்கைக்[13]கரைக்கண்டஞ் சீர்பதரியாச்சிரமம்
சிங்கவேள்குன்றம் திருப்பிரிதி—பொங்கு[14]புகழ்
36 வைகுந்தம் [15]பாற்கடல் மாநீர் அயோத்திநகர்
[16]பொய்குன்றச்செய் மதுரைப்பொன்னகரம்—[17]மொய்குன்று

[பி - ம்.] [1] நாட்டில். [2] வில்லவாவும். [3] விற்றுவக்கோடு. [4] 28, 29-ம் கண்ணிகள் ஒரு பிரதியில்,

அயிந்திரபு ரங்கோவ லத்தியூர் வெஃகா
துயின்ற பரமே சுரவூர்—இயஞ்சேரும்
பாடக மாடகத்தின் பாவை மகிழ்ந்துறையும்
ஏடலருந் தாமரைக ளெந்நாளும்—மாடலரும்

என்று காணப்படுகின்றன. [5] டுண்டமே. [6] பரவும். [7] நீர்மலையே. [8] கதிரினஞ் சேரும். [9] தடமார். [10] வியன்சேர். [11] நாங்கைநைமிசாரணியம்நாளுமே. [12] புனல். [13] கரைக்கண்டங்காப்பதரிகாச்சிராமம். [14] புனல். [15] பாற்கடலே. [16] பொய்குன்றுசீர்மதுரைப்பொன்னகரம். [17] மெய்குன்று.

37 ஆண்டார் திருவாய்ப்பாடி யாழ்கடல்சூழ் வண்டுவரை
தொண்டர்[1]குழாம் [2]சூழுமிந்தத் தொல்பதிகள்—கண்டும்
38 [3]தொழுதும் வலஞ்செய்துஞ் சொல்லித் துதித்தும்
முழுது முணர்ந்தும் முறையே—எழுதுகலை
39 யோதியும் வேத முரைத்தும் உலகறியத்
தாதி னடிமை தலைநின்றும்—வேத
40 நிழலே சரண மெனநினைந்து வாழ்வார்
கழலே நமக்குக் கதி *

[4]மின்னு திகிரி வலவன் விசும்பெங்கும்
பன்னு திருப்பதிகள் [5]பாவெல்லாம்—துன்னுகலை
[6]கற்றார்கள் தொண்டர் கழற்கமலங் கால்பணியப்
பெற்றார் பெறுதார் [7]பிறப்பு.

ஸ்ரீராமஜெயம். ஆழ்வார்திருவடிகளே சரணம்.

[பி - ம்.] [1] குழாஞ்சூழுந்தொல்பதிகள். [2] சூழுமித்தொல்பதிகள்.
[3] 38, 39, 40-ஆம் கண்ணிகள் ஒரு பிரதியில்,

38 தொழுது வலஞ்செய்து சொல்லித் துதித்து
முழுதுணர்ந்தோர் கூறு முறையே— எழுது
39 கலையோதி வேத முரைத்துக் கனிந்து
முலகறிய நாமடியோ மென்று—தலைநின்று
40 வாழ நினைவீர்கள் வம்மினோ! வம்மினம்
மாழ்வார் சரணினைவீ ராம்

என்றுள்ளன.

[4] மன்னு. [5] பாட்டெடுப்ப. [6] கற்றாரவர்கண்டர்கண்ட கழற்கமலம். [7] பிறந்து.

* "மண்ணி லரங்கமுதல் வைகுந்த நாடளவும்
எண்ணுந் திருப்பதிநூற் றெட்டினையும்—நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவார் கேட்டிருப்பார்
பொற்பாதம் என்றலைமேற் பூ" (109)

"ஈரிருப தாஞ்சோழம் ஈரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாமலைநா டோரிரண்டாம்—சீர்நடுநா
டாறோடீ ரெட்டுதொண்டை யவ்வடநா டாறிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள்" (6)

என்ற நூற்றெட்டுத்திருப்பதியந்தாதிச்செய்யுள்கள் இங்கு நோக்கத்தகும்.

தமிழ்வசன நடை

:(o):

[திருவாளர். சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்.]

மொழி அல்லது பாஷை யென்பது ஒருவர் தாம் நினைந்ததனைப் பிறருக்கு உணர்த்தும்பொருட்டு உபயோகிக்கும் ஒலியாம். இவ்வொலியை அறிவித்தற்காக எழுதிவழங்கும் வரிவடிவும் பாஷையின்பாற்படும்.

இவ்வுலகில்வழங்கும் பாஷைகள் பல. அவற்றுட் சிலவற்றுக்கு வரிவடிவில்லை. சிலவற்றிற்கு இலக்கண அமைதியில்லை. சில சமீபத்தில் உண்டானவை. தமிழ்மொழியோ பல நூற்றாண்டுகளாகத் தென்னிந்தியாவிலே வழங்கிவருகின்றது. பண்டைக்காலத்திலே இதற்குப் பல இலக்கணநூல்கள் அகத்தியர் முதலியோராற் செய்யப்பட்டிருக்கின்றன. ஆங்கிலபாஷையிலே பழையநூல்கள் மிகச்சில. அவையும் மிகச்சுருங்கியவை. சமீபகாலத்திலேதான் பலநூல்கள் உண்டாயின. அவையெல்லாம் விரிவானவை. ஆங்கிலத்தில் ஒரு நூல் எவ்வளவு விரிவாகச்செய்யப்படுகின்றதோ அவ்வளவு அந்நூல் விசேஷமுடையதாகும். தமிழிலோ முற்றும் மாறுதலாகக் காணலாம். தமிழில் முற்காலத்திற் செய்யப்பட்ட தொல்காப்பியம் முதலிய விரிந்தநூல்கள் கற்றற்குரியவர்களின்மையாற்போலும் நன்னூல் முதலியவை பிற்காலத்திற் சுருக்கப்பட்டன. தமிழ்நூல் எவ்வளவு சுருக்கத்தோடு திட்பமும் உடையதாயுள்ளதோ அவ்வளவு அந்நூல் சிறந்ததாகக் கொள்ளப்படும்.

பழைய தமிழ்நூல்களெல்லாம் பாட்டுவடிவாயமைந்தவை. பண்டைக்காலத்தில் எழுதப்பட்ட விண்ணப்பங்களும் கடிதங்களும் பாடல்களாகவேயிருக்கும். வசனங்களை உரைகளிலன்றிக் காண முடியாது. உரைகளிலும் சில பாட்டென்றே சொல்லுந்தரத்தன.

பரிமேலழகருரையும் சங்கரநமச்சிவாயப்புலவருரையும் இத்தன்மைவாய்ந்தவை. சிவஞானமுனிவரே சில ஆண்டுகளுக்குமுன்னர்த் தனி வசனநூல் செய்யத்தொடங்கினார் பின்னர்த் தாண்டவராய முதலியார் எழுதிய பஞ்சதந்திரம், கதாமஞ்சரி முதலிய நூல்களும், அதன்பின் சில ஆண்டுகள் கழித்து ஆறுமுகநாவலர்வசனநூல்களும் தோன்றின. சாத்திரவிஷயத்தையேனும் உலகவிஷயத்தையேனும் யாவரும் எளிதில் விளங்கிக்கொள்ளத்தக்க நடையுடையது நாவலர்வசனமேயாம்.

பாஷை பேசுவோருடையகருத்தும் எழுதுவோருடையகருத்தும் தாம் அறிந்ததனை அவ்வாறே பிறர்க்குணர்த்தவேண்டுமென்பதேயாதலால், தமிழிலே வசனமெழுதுவோர் சுத்தமான தமிழ்ச்சொற்களை எடுத்தாளுதல் நன்று. பிறபாஷைச்சொற்களை விலக்கல் வேண்டும்.

தமிழ்மரபைக் காக்கவேண்டும், பிறபாஷையிலுள்ள மரபுச்சொற்களையும் கருத்துக்களையும் தமிழ்வசனநடையிற் புகுத்தலாகாது. இக்காலத் தமிழ்வசனநடையிலே பின்வரும் ஆங்கிலக் கருத்துக்கள் விரவிவருவதைக் காணலாம். அவை தமிழ்மரபிற்குப்புறம்பானவையாதலின் அவற்றை முற்றும் விலக்கவேண்டும்.

(1) ஓய்வெடுத்துக்கொண்டேன்—(Took leave)
(2) நோயில் வீழ்ந்தேன்—(Fell ill)
(3) லீவுபோட்டிருக்கிறேன்—(Have applied for leave)
(4) முட்டுக்கட்டை—(Stumbling block)
(5) சாவுமணி அடித்தாயிற்று—(Gave a death knock)
(6) காயிதம்போட்டேன்—(Dropped letter)
(7) கூட்டம்நடைபெறும்—(A meeting will take place)
(8) சபைதிறந்துவைக்கப்படும்—(Society will be opened)
(9) பாடசாலை திங்கட்கிழமை திறக்கப்படும் — (The school will be opened on Monday)
(10) யான் ஓய்வெடுத்திருக்கின்றேன்—(I am on leave)
(11) வாங்குதல் வேண்டப்படுகின்றது — (Your patronage is solicited)

இத்தகைய சொற்றொடர்களும் மொழிகளும் பல பத்திரிகைகளிலும் தமிழ்வசன நூல்களிலும் இக்காலத்தில் மலிந்திருத்தலைக் காணலாம். இவை ஆங்கிலச்சொற்றொடரின் மொழிபெயர்ப்பாகக் காணப்படுகின்றன; தமிழ்வரம்புக்குட்பட்டவையும் அல்ல; ஆகலின் இவற்றை உபயோகித்தல் தவறாகும்.

சிலர் கற்றீது என்பதைக் கற்றீது என்றும், பன்னூற்றிரட்டு என்பதைப் பன்னூற்திரட்டு என்றும், முட்டீது என்பதை முட்தீது என்றும் எழுதுகின்றனர். இது தமிழிலக்கணத்தொடு மாறுபட்டதாகலின் இதனையும் முழுதும் விலக்கவேண்டும்.

தேங்காய்-எண்ணெய், சுடுதண்ணீர் முதலிய வழுக்களையும் அறவே நீக்கவேண்டும். ழகர ளகர பேதங்களை நன்கு கவனித்தல்வேண்டும்.

பாட்டைப்போலவே வசனத்துக்கும் இன்னோசைவேண்டும் தங்குதடையின்றி நீரோட்டம்போலச் செல்லவேண்டுமாதலாலும், கேட்போருடைய செவிக்கு இனிமைபயக்கவேண்டுமாதலாலும் வசனங்களுக்கு இன்னோசை வேண்டற்பாற்று.

தமிழ்வசனநடை நல்லமுறையில் அமைவதற்கு நாவலர் வசன நூல்கள் வழிகாட்டியாயுள்ளன வெனக்கூறலாம். செல்வக்கேசவராயமுதலியார் எழுதிய தமிழ்வசன நூலகளும் படிக்கத்தக்கவையாகும். அவர் தமிழ்வசனம் எழுதுவதற்கு இலக்கணம்போன்ற அருமையான நூலொன்று "தமிழ்" என்னும் பெயருடன் எழுதியுள்ளார். ஆண்டுக் காண்க.

> "எப்பொருளெச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
> செப்பின ரப்படிச் செப்புதல் மரபே"

என்பது நன்னூற்சூத்திரம். மரபு என்பதை ஆங்கிலத்தில் (Idioms) என்பர். இவற்றை விளக்கும் தனிப்புத்தகம் ஒன்று ஆங்கிலத்தில் உண்டு. தமிழில் அத்தகைய நூல் இல்லாமை வருந்தத்தக்கது. ஆயினும், தமிழிலக்கணத்தோடு மரபு ஒருபகுதியாக இயைக்கப்பட்டுளது.

பண்டைமக்களின் பொது இருப்பிடம்

[சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.]

[அ-ஆம்பக்கத் தொடர்ச்சி.]

உறவின்முறைப் பெயர்டுகள்

தமிழரும் ஏனைய புராதனகுலங்களும் ஒருங்கு ஓரிடத்தில் வசித்திருந்தவர்கள் எனில், அவர்களுள் மிக நெருங்கிய உறவின்முறைப்பெயர்களும் ஒத்திருப்பது வேண்டப்படுமன்றோ? அப்பா, அம்மா, பிள்ளை, மகன், மகள் ஆதிய சில சொற்கள் எல்லாரும் சிறுவயதுதொட்டே வழங்குகின்றவைகள்; எளிதிலே மாறிப்போகாதவைகள். இவைகளில் வேறுவேறான பழைய பாஷைகளிலே ஒற்றுமைகாண்போமாயின், அப்பாஷையாளர் யாவருக்கும் உரிய பொது இருப்பிடக்கொள்கை மிகவும் வலியுறுவதாகும்.

இனி, இந்து-ஐரோப்பியபாஷைகளிலே பிதா மாதாவுக்கு பித்ரு மாத்ரு (ஸம்ஸ்கிருதம்), பத்தேர் மேத்தேர் (கிரேக்கம்), பாதர் மதர் (இங்கிலிஷ்), ஹயிர், மயிர் (ஆர்மேனியம்) ஆதியனவாக வருவனவெல்லாம் ஒரு அடியாய்த் தோன்றியவை என்பர் சொற்கலைநூலோர். தமிழில் இவற்றிற்கு ஒத்தவை உண்டா? உண்டு என்பது சற்று நுணுகி ஆராயுமிடத்து வெளியாகும். அப்பா, அம்மா எனுஞ் சொற்களைத் தமிழிலும் அதன் பாகதங்களிலும் ஒவ்வொருவகையிற் காணலாம். இவைகளில் ஈற்றசையை அழுத்திச்சொல்லுமிடத்து பா, மா என்றே தொனிக்கும். இவற்றோடு நமக்குள் தம்பிக் - காரன், அம்மான் - காரன் என்று நாடோடிப் பாஷையில் வருவதுபோல த்ரு(=தேர், தார்) என்ற அடையைச் சேர்க்குங்கால், பா—த்ரு, மா—த்ரு என ஆதலைக் காணலாம். வடமொழியில் உள்ளபடி, கிரேக்கத்தில் தா—த்ரு (dha- tru) ஞொ-த்தேர் (gno-ter), பக் - தார் (pat- tar) என த்ரு, தேர், தார் எனும் இறுதி அடைகள் பல சொற்களில் வருதல் பிரசித்தம். ஆகவே, தமிழ் அப் - பா, அம் - மா என்பன பா-த்ரு, மா - த்ரு ஆதியனவோடு ஒன்றாயிருத்தலில் ஐயுறவில்லை. பிற பழைய

பாஷைகள் அப் என்று முதலசையைக் கைவிடாமலிருக்கின்றன. சுமேரியத்தில் தந்தைக்கு அப், அப்ப(ab, ap, abba), அக்கத்தியத்தில் அபு(abu), சீறியாக்கில் அப்ப (abba), எபிரேயத்தில் அப் (ab), கொதிக்கத்தில் அப (aba) என வரும். இவையன்றி, கிரேக்கத்தில் அப்ப, பப்ப (appa, apha, pappa) பழைய ஆங்கிலத்தில் அபொட் (abbod), இங்கிலீஷில் அபொற் (abbot), எனும் உருவங்களும் உள. தாய்க்கு சுமேரியம், கித்தியம், பஸ்கு, பழஞ்சர்மனியம் இவைகளிலெல்லாம் அம (ama) எனப் பெயர்சொல்லப்பட்டது. ஸம்ஸ்க்ருதத்தில் அம்பா (amba). கிரேக்கத்தில் மம்ம (mamma) பேர்த்தியின் பெயரீடு. பப்பா, மம்மா (= அப்பா, அம்மா) என்று இங்கிலீஷில் இன்றைக்கும் கேட்கின்றோம்.

அத்தன் (அச்சன், அஜ்ஜெ) என்ற தமிழ்முறைச்சொல்லில் இது இன்னும் அதிக தெளிவாகும். சுமேரியத்தில் அத் அத்த (ad, at, adda) என்பன தந்தைக்கும் தாய்க்கும் பெயர். கித்தியம் அத்தஸ் (attas). எத்துருஸ்கம் எனும் பழைய இத்தாலியமொழியில் அத்துமெ (attume). உறவின் முறையைக்குறிக்கும். கிரேக்கத்திலும் லத்தீனிலும் கொதிக்கத்திலும் அத்த (atta) பிதாவின் பெயர். அல்பானியம் அத், தத்தெ (at, tate), கிரேக்கம் தத்த, தெத்த (tata, teta), லிதுவானியம் தெத்த, தெத்திஸ் (teta, tetis), பழஞ்சர்மனியம் தொத்தொ (toto), இங்கிலீஷில் டாட் (dad), இவையெல்லாம் தந்தைமுறைப்பெயர்கள். ஸம்ஸ்க்ருதத்தில் தாத்த (tata) பிதா, குழந்தை, நண்பன் எனும் பொருள்களுள்ளது. அன்னை எனும் தமிழ்ச்சொல் கித்தியத்தில் அன்னஸ் (annas), அங்கேரியத்தில் அன்ய (anya), துருக்கியத்தில் அன (ana), பாரசீகத்தில் நன (nana), அல்பானியத்தில் நேனெ (Nene), ஸம்ஸ்க்ருதத்தில் நனா (Nana) என நிற்கும். லத்தீனில் நொன்ன (nonna), இங்கிலீஷில் நன் (nun) என்பன துறவுபூண்ட அன்னைக்குப் பெயர். அனுஸ் (anus) கிழவியாகும். கிரேக்கத்தில் நன்ன, நென்ன (nanna, nenna) என்பவை சிறியதாய், பெரியதாய் மாமி பெயர்.

பிறந்தது, புறப்பட்டது எனும் பொருளுள்ள பிள்ளை (புள்ளை) எனும் தமிழ்ச்சொல்லும் பிறமொழிகளில் பலவகையாய்த் திரிந்துள்ளது. லத்தீன் புல்லுஸ், பூஎர், பூஎல்ல (pullus, puer, puolla), கிரேக்கம்

பொலொஸ் (polos) என்பவை மிருகக்குட்டி, கன்று, பிள்ளை எனப் பொருள் படும். கொதிக்கத்தில் பூல (fula), பழஞ்சர்மனியத்தில் பொலொ (folo), இங்கிலீஷில் போல் (foal) இளம் மிருகப்பெயர். பிராஞ்சியத்தில் பூலயிங் (poulain) குதிரைக்குட்டி. பிள்ளை (புள்ளை)யோடு ஒத்த பிறப்புடைய பொத்தி, போத்து எனும் சொற்களை ஸம்ஸ்க்ருதம் போதஸ் (potas) கன்று, லிதுவானியம் பௌதஸ் (pautas) முட்டை என்பவற்றிற் காணலாம். ஸம்ஸ்க்ருத புத்ரஸ் (putras) மகன்; லத்தின் புத்துஸ் (putus, putellus) பையன்; பழம் ஸல்வோனியம் புத்த, புத்திக்க (puta, putica) குருவி; லிதுவானியம் புத்யித்திஸ் (putyitis) இளம்பட்சி அல்லது மிருகம் என்பவை களும் புள்ளை எனும் ஆதியுருவமுள்ள பிள்ளையோடு ஒத்தனவே.

அகல்-தல் எனும் சொல்லிலிருந்து வருகின்ற மக எனும் தமிழ்ச்சொல், பிறந்தது, புறப்பட்டது, விரிந்தது, பெரியது எனும் பொருள்களில் வழங் கும். மக, மகவு, பிள்ளை, மகத்து, பெரியது, உயர்ந்தது. இச்சொல் சுமேரி யத்தில் மஹ், மக் (mah, mag) என நின்று மேலானதைக் குறிக்கும். கிரேக் கத்தில் மெகஸ் (megas), லத்தீனில் மாக்னுஸ் (magnus), ஸம்ஸ்க்ருதத் தில் மஹ பெரிய, கொதிக்கம் மிக்கில்ஸ் (mikils), இங்கிலீஷ் மச் (much) மிக. தமிழில் மகன் ஆண்பால், மகள் பெண்பால். இச்சொல் கயெலிக் எனும் பழைய ஐரிஷ்பாஷையில் மக் (mac) எனப் புத்திரனை உணர்த்தும். கொதிக்கத்தில் மகுஸ் (magus) பையன். இது ஐஸ்லாந்தியத்தில் மொக்ரு (mogr) என நிற்பது. மகள் எனும் சொல் கொதிக்கத்தில் மகத்ஸ், மவி (magaths, mawi) என, சர்மனியத்தில் மக்ட் (magd) என, ஒல்லாந்தத் தில் மாக்ட் (maagd) என, இங்கிலீஷில் மெயிட் (maid) எனச் சொல்லப் படும்.

ஸ்ரீ:

பத்திராசிரியர்குறிப்பு

பத்திரிகைவெளியீட்டுக்குப் பெரிதும் தடையாயிருந்த காகிதப்பஞ்சம் ஒருசிறிது குறைந்துளது. போதிய அளவு நல்லகாகிதம் கிடையாவிட்டாலும் கிடைத்த அளவில் இனி அதிகமானபக்கங்களிற் பல நூற்பிரசுரங்களும் பலப்பல அரியபெரிய பொருளுரைகளும் கொண்டு செந்தமிழ் உரியகாலத்து வெளிவரும். இதுவரை செந்தமிழ்க்குக் கட்டுரைவழங்கிவந்த புலவர்களுக்கெல்லாம் எமது நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்கிறோம். செந்தமிழ்நேயர்கள் இதுகாறும் அதனை ஆதரித்துவந்ததுபோல் மேலும் ஆதரித்துவருமாறும், புலவர்கள் மேலும் தமது அரிய பொருளுரைகளாற் செந்தமிழைச் சிறப்பித்துவருமாறும் வேண்டுகிறோம்.

செந்தமிழில் முன்னர் வெளியிட்டுவந்து காகிதப்பஞ்சத்தால் நிறுத்தப்பட்டிருந்த குருகைமான்மியத்துள் இறுதிப்பகுதியில் இதுவரை அகப்படாதிருந்த சருக்கங்களுள் மாறன்திருவவதாரச்சருக்கத்து 48 பாடல்கள், சென்னையிலுள்ள யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியில் கடமையாற்றிவரும் திருவாளர் நா. வரதராஜுலு நாயுடு அவர்களிடமிருந்து திருவாளர் ராவ்ஸாஹிப் S. வையாபுரிப்பிள்ளையவர்கள்மூலம் கிடைத்தன. அவை கிடைத்தபடியே இப்பகுதியில் வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சியபகுதிகளும் கிடைத்தால் தொடுத்து வெளியிட்டுக் குருகைமான்மியக் குறிப்புரையையும் அடுத்து வெளியிட்டு முற்றுவிக்கலாகும். பிரதியுடையார் கொடுத்துதவுக. மாறன் திருவவதாரச்சருக்கப்பாடல்களையுதவிய திருவாளர் வரதராஜுலு நாயுடு அவர்களுக்கும் திருவாளர் ராவ்ஸாஹிப் S. வையாபுரிப்பிள்ளையவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மதிப்புரை

(1) பதிபசுபாசப்பனுவல், (2) அளவையட்டவணை, (3) பதி பசுபாசத்தொகை என்பவற்றுள் முந்தியதும் பிந்தியதும் முப்பொருளுண்மையினை விளக்குவன. இடைப்பட்டது முப்பொருளாராய்ச்சிக்குக் கருவியாகிய அளவைகளை விளக்குவது. இவற்றுள் முந்திய இரண்டும் சுருங்கிய உரைநடையாயமைந்தவை. பிந்தியது 25 அழகிய குறள்வெண்பாக்களாலியன்றது.

சிவஞானசித்தியார் முதலிய சைவசமயநூல்களைக் கற்கப்புகுவார் முதலிற் கற்றுக்கொள்ளத்தக்கனவாய் அமைந்த இவற்றை ஒரேபுத்தகமாக அச்சிட்டுதவிய திருத்தென்குடித்திட்டைச் சித்தாந்தவித்தியாசாலைத் தமிழாசிரியர் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களது தமிழ்ப்புலமையும் சமயநூற்பற்றும், இப்பதிப்புக்குப் பொருளுதவிபுரிந்த திருவாளர் சாமிவேலாயுதம்பிள்ளை B.A., L.T. அவர்களது பரோபகாரசீலமும் பாராட்டத்தக்கன. இப்புத்தகம் வேண்டுவோர் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடம் பெறலாம். [நன்கு அச்சிடப்பட்டுள்ள இப்புத்தகத்துள் 9-ம் பக்கத்து "ஆன்மாவைச் சிவமா வரித்தகாலத்து", "ஆன்மாவை மலமா வரித்தகாலத்து" எனவும், 11-ம் பக்கத்துள் "சாதிமலர்காய்" எனவும் இருப்பவை பொருட்பொருத்தமற்றிருத்தலால் அவற்றைப் பொருந்துமாறு முறையே "ஆன்மாவைச் சிவம் ஆவரித்தகாலத்து", "ஆன்மாவை மலம் ஆவரித்தகாலத்து" என்றும், "சாதி மலாகா" என்றும் திருத்திக்கொள்ளல் தகும். ஆவரித்தல் - மறைத்தல். மலாகா என்பது ஒருதேசம். அஃது ஆகுபெயராய் அந்நாட்டு விளையும் சந்தனக்கட்டையையுணர்த்தியது. இத்தேசத்துச் சந்தனக்கட்டை மிக்க வாசனையுடையதென்பர்].

[யாப்பருங்கலமூலமும் யாப்பருங்கலக்காரிகைமூலமும்.— பதிப்பாசிரியர்—திருத்தென்குடித்திட்டைச் சித்தாந்தவித்தியாசாலைத் தமிழாசிரியர் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள். விலை அணு 3. பதிப்பாசிரியரிடம் பெறலாம்].

சிறந்த தமிழ்ச்செய்யுளிலக்கணங்களாகிய இவை நல்லகாகிதத்தில் திருத்தமாகப் பதிக்கப்பட்டுள்ளன. உரிய இடங்களில் பிரதிபேதங்களும் கீழ்க்குறிப்பில் காட்டப்பட்டுள்ளன. தமிழ்க்கல்வி பயிலத்தொடங்கும் சிறுவர்க்கு மிகவும் பயன்படும்.

2625 மின்னணங் குறநுண் ணிடைக்கணங் கிழைக்கும்
வெற்பெனப் பணைமுலைத் திரைசூழ்
மன்னணங் கெனவே பொறைமலி கயற்கண்
மதிநுதற் றிருமடந் தையொடும்
இன்னணங் களித்தில் லறத்தினி துறைநாள்
இண்டையா சனத்துவீற் றிருக்கும்
பொன்னணங் குவந்து குடிபுகுந் தகலாப்
பொறிகுலாந் துளபமார் புடையோன். (௧)

2626 எழுவகைத் தோற்றத் துலப்பில்பல் வடிவத்
திழைத்தலுழ் தொலைதரு நெறித்தாய்ப்
பழுதறு திறத்திம் மனுக்குலம் படைத்தும்
படுகொலைக் கணிச்சிவாய்ப் படுவான்
கழுமலுற் றனராய்ப் புலனவித் தறியார்
கழிந்தபே ரின்பவாழ் வளிக்கும்
முழுநிலத் தடைவா னொருபதாம் பிறப்பின்
முன்னுதற் குளத்தினிற் குறித்தான். (௨)

இரண்டுந் தொடர்.

வேறு

2627 பார்வைப் புறவால் வணப்புறவு
படுக்கு மவர்போற் புதன்மறைந்து
வார்வைத் திளமா னினைவளைப்ப
மான்கொண் டடன்செல் குனர்போலுன்
போர்வைப் படிவத் திருநிலத்துட்
புலவர்க் கரசாய் வருவலெனுச்
சேர்வைத் தமரு ளிருவரைமுன்
செப்புந் திறத்தின் விடுத்தாரே. (௩)

2628 வாளேர் விழிப்பூ மகள்கொழுநன்
வரத்தின் விடுத்த விருவர்களும்
வேளேர் பசுந்தென் றலின்குழவி
விரைமென் மலர்த்தா தளைந்துமைந்தர்

தோளூர்ந் தவர்மங் கையர்கொங்கைச்
சுவட்டிற் றவழ்ந்தா டலையுணர்த்துங்
கோளூ ரினும்வண் டமிழ்கொழிக்குங்
குருகூ ரினும்வந் துதித்தாரே. (௪)

2629 திருமால் விடையி னிலைத்துதித்த
திருத்தொண் டினரிற் றிருப்புளியாய்
வருமா தரவொன் றியசேடன்
மலர்க்க ணுறங்கா தவதரிப்பப்
பெருநான் மறையந் தணர்குலத்துட்
பிறந்தே மதுர கவியெனப்பேர்
தருமா றகில தலம்வலமந்
தணனுங் கலுழன் றிரிதருமே. (௫)

வேறு

2630 பொருப்பெனப் பணைத்து மணிவடஞ் செறித்துப்
புழைபடுங் கரடமால் யானை
மருப்பெனக் கதிர்த்து வளர்படா முலைமின்
மருங்குலா யிழைதிரு வயிற்றில்
விருப்பமுற் றறநூல் விதித்தன தொடங்கி
மேதினி தழைத்திடுந் திறத்தாற்
கருப்பமுற் றதுவாய்க் கலந்தது மறையுங்
காண்பருங் கடவுளின் வடிவே. (௬)

2631 திரம்பெறு கருப்ப மடந்தைதன் வயிற்றிற்
செறிந்திடா வளர்தலுந் தீம்பால்
சுரந்திள முலைக்கண் கறுத்திடை தடித்துச்
சுழன்றநீர்ச் சுழிபுரை மிதலை
பரந்துயர் திடர்செய் தணிகலை தளர்ந்து
பவளவாய் விளர்ந்துவாண் முகம்வேர்
நிரந்தர மரும்பப் பசலைமெய்ம் முழுக
நிறைந்தவை யிரண்டுதிங் களுமே. (௭)

2632 மும்மையா முகம்போய்க் கலியுக மடிக்கொண்
முப்பஃ தொடுபன் மூன் றுநாட்
செம்மையார் மதிவை காசிபன் னிரண்டாந்
திருவிசா கத்தினி லசுரர்
தம்மையாள் சூரவன் கிழமையிற் கடகந்
தழைந்தொளி சிறந்தபூ ரணையில்
எம்மையாண் டருளு முதல்வனைப் புதல்வ
னெனத்திருந் திழைகரு வுயிர்த்தாள். (அ)

2633 விரைத்தளி மதுமென் மலர்க்குழன் மடந்தை
விரிஞ்சனு மேருவாஞ் சுவண
வரைத்தவா முனியும் புகழ்தனி முதலை
மதலையாய்க் கருவுயிர்த் தளவிற்
றிரைத்தெறி தரங்கக் கடற்கலை மகளுந்
திருத்தகு மனுமுத லியநூல்
உரைத்தமை வுடைநற் றுணமா தியவா
முறுபுதல் வரைப்பொறை யுயிர்த்தாள். (௯)

2634 மத்தள மிடக்கை சல்லிகை படகம்
வளங்கொள்பே ரிகைகா டிகைதெண்
முத்துரு தவள வரிவளை யிரலை
முழவுதண் ணுமையிவை முதலாம்
உத்தம வியங்கள் வயங்குநீ ணகரத்
தும்பர்வான் குளிறிடிக் குலம்போற்
றத்துநீர்த் தமரத் திமிரவா ரிதிபோற்
றழங்கின தழங்கின முரசம். (௧௦)

2635 மகரயா ழினுக்குஞ் சகோடயா ழினுக்கும்
வளங்கொள்செங் கோட்டியா ழினுக்கும்
நிகரிலா முதன்மைப் பேரியா ழினுக்கு
நிகழ்ந்துதீந் தொடைகளை நிரைத்தும்
புகரிலா மதங்கர் விதஞ்செயே ழிசையைப்
பொழுதொடு கிரிகையுஞ் சதியும்
பகருமா னமுமே தகநிறைத் தெடுப்பும்
பாடலி னொலிபரந் தனவே. (௧௧)

2636 சுடர்மணி மவுலி யுரககங் கணமுஞ்
சுமக்கருந் தொகுதியிற் செவியால்
விடலரு மிசையு மியலுமாண் சதியு
மெய்யினுங் கையினும் பதத்தும்
படர்தரக் காஞ்செல் புலங்களிற் கருத்தும்
பார்வையும் படர்தரா வின்பக்
கடலகத் தழுந்தி நடநவின் றெழுகுங்
கணிகையர் வரம்பிறந் தனரே. (கஉ)

2637 ஆடு வாரொலி யன்றியு மங்கலம்
பாடு வாரொலி மாதர்பல் லாண்டொலி
நீடு முண்மை நிதிசுமந் தாதுலர்த்
தேடு வாரொலி போய்த்திசை தேய்க்குமே. (கங)

2638 அன்ன தானங்க ளன்றியு மவ்வவர்
சொன்ன தானங்க ணல்கியுந் தூய்மைசால்
முன்ன தாயநுண் ணூலுரை முக்கியம்
என்ன தானமென் றுய்ந்தவை யீகுவார். (கச)

2639 செம்பொன் மாளிகை வாயிலிற் சீர்கெழு
பைம்பொன் வாழையும் பூகமும் பாடமைத்
தும்ப ராலய மீதென வொண்மணிக்
கும்ப நீணிரை வைக்குநர் கோடியே. (கரு)

2640 அரிச னத்துக ளாடிநெய் யாடிமெய்
பரிசி யாவண் பொருநைப் பரப்பெலாம்
உரிய வாவியி னுட்புகுந் தொப்பிலாக்
குரிசி லைப்புகழ்ந் தாடுநர் கோடியே. (கசு)

2641 சுணங்கு லாயபொற் கொங்கைச் சுவட்டின்மேல்
மணங்கு லாவிய மான்மதச் சேறணிந்
தணங்கு போலெதிர்ந் தண்டையை வாங்கியே
இணங்கி நின்றெறி வாரெண்ணில் கோடியே. (கஎ)

2642 சொன்ன லம்பயின் மாதவத் தூய்மையு
மன்ன லம்பயி னுன்மறை வாய்மையும்
நன்ன லம்பெற நங்கைதந் தான்வரும்
பன்னி ரண்டெனக் கூறிய பான்மைநாள். (கஅ)

2643 திக்கிற் றேவர்கள் வைகுஞ் சினகரம்
ஒக்கச் செம்பொ னடர்பொதிந் தோங்குசீர்
மிக்க தாய விழாவமைத் தந்தணர்
தக்க வேள்விக்குந் தக்கன நல்கினூர். (கக)

2644 அம்பு ராசி யகிலத் திருந்தநீ
டும்பர் வைகிய கோணிலை யுன்னியே
எம்பி ரான்றன தாக்கங்கள் யாவையும்
செம்பொ னேட்டிற் பொறித்தனர் செம்மையோர். (உ0)

2645 திண்மை நான்மறை தெற்றெனக் கற்றுணர்ந்
தொண்மை ஞானம துற்ற புரோகிதர்
வெண்மை யற்ற பிதாவுடன் மேதகு
வண்மை நாமம் வகுத்துணர்த் தென்றலும். (உக)

2646 சுட்டி யைம்படைத் தூய்மணிச் சோதிகூர்
வட்ட வாழி மதாரிக் கிண்கிணி
நெட்டி ருட்டிர ணீக்குபொன் ஞாணிவை
பட்ட வாணுதற் பாவையர் பூட்டினூர். (உஉ)

2647 பட்டு லாய பயோதரத் தாடா
மட்டு லாமலர் மார்பினன் வாங்கியே
சிட்ட நாதன் வலது செவியுறீஇ
இட்ட பேர்புவி மாறெனன் றேத்துமே. (உங)

2648 நாமந் தன்னை நவின்றபின் னங்கைதன்
காமர் மார்பத் தணைத்துக் களித்தலும்
ஓமஞ் செய்தவர்க் குத்தம தானம
தேம மெய்த விறைத்தனன் றாதையே. (உச)

2649 செம்மை யால்வருந் தேவர்க ளாந்தொழின்
மும்மை யாரு ளிடைநின்ற மூர்த்தியான்
எம்மை யாளவந் தானெனன்பர் வானுளோர்
தம்மை யாளும் புதல்வனைத் தாயரே. (உரு)

2650 சுருதி நான்மறைச் சோதியுட் சோதியாய்
வருதி யான மதிச்சுட ரோவிளம்
பருதி யோநிறை பான்மதி யோவெனக்
கருதி மங்கையர் கண்களித் தார்களே. (உகா)

2651 காரி யார்திரு மைந்தனைக் காதலால்
வாரி மார்பி னெடுத்து மடந்தைமார்
சீரி தாஞ்சிற் றடிசெய்ய போதினும்
ஏரி தாமென் றிணைவிழி யொற்றுவார். (௨௭)

வேறு

2652 நறுமலர்த் தவிசின்மே லன்றி நங்கைதான்
வெறுநிலத் தடியிட விடினு மெய்யுறூ
துறுதகைத் தகம்புற னுறப்பைந் துட்கொளப்
பெறுதகைக் கமடமென் பெற்றித் தென்பவே. (௨௮)

2653 உருமலர் மணியிணைக் கவாதொண் மைசான் (?)
மருமலர்ச் சாயலை வருத்தி வச்சிரக்
குருமணிக் கோணுறக் குயின்ற தென்பர்தாட்
டிருமணி விரற்கடை யுகிரின் செவ்வியே. (௨௯)

வேறு

2654 தேவர் தேவன் றிருமரு மார்பன்கைத்
தூவ லம்பின் றெருகுதிக் குறையுளாம்
ஆவ மேயிணை யாவதென் பாருயிர்க்
காவ லன்கணைக் காலைக்கண் டார்களே. (௩0)

2655 இலகு மிங்குலி கக்குன் றின்றிழிந்
துலகின் மேற்பரந் தோடு நதியுளாய்
நிலவு செம்மை நிறந்தழைத் தேவளர்
அலவ னென்ப ரணிமுழந் தாளையே. (௩௧)

2656 கறங்கு நீர்ப்புவி மேற்கதிர் மாமணிப்
பிறங்கல் போன்ற களிற்றின் பிணருருத்
திறங்கொள் செங்கை யுளவெனிற் சேர்க்கலாம்
குறங்கின் செவ்விக் கெனக்குறித் தார்களே. (௩௨)

2657 படித ழைக்கப் பிறந்தருள் பான்மையான்
கடித டத்தின் கவினு மருங்குலும்
வடிவ மைந்த வுதரமு மாசிலார்
நொடித ழைந்தநுண் ணூலொடொன் றென்பரே. (௩௩)

வேறு

2658 பாண்மிழற் றியகளிச் சுரும்பு பாய்மகிழ்
நாண்மலர் கடுப்பதா நாபி மாமணித்
தூணிணைப் பொருவருந் துணைக்கை தோள்கடாஞ்
சேணுயர் மேருவிற் றிரண்ட வென்பரே. (௩௪)

2659 பார்பக விடித்தவன் பகடு கூறுவான்
பேர்பகர்ந் தனவெலா மெழுதப் பீடிலாய்
மார்பகன் றதுமணி மிடறு வானுளோர்
போர்பகத் தெழிவலம் புரியென் பார்களே. (௩௫)

வேறு

2660 செய்ய வாய்திருக் கண்மலர் காதிணை
யையன் வார்புரு வத்துணை யானனம்
பைய ராவணையாற்குள பான்மைபோற்
றையன் மேயதென் பார்ஙைதய லார்களே. (௩௬)

2661 தாக்கின் மேம்படு தந்தியின் றோட்டியா
மூக்கின் செவ்வியை யேத்துறின் முந்துநூல்
வாக்கின் செல்வி வழாதுறை நாவலோர்
நாக்கின் செவ்விக்கு நன்கட னென்பவே. (௩௭)

2662 சோதி வாணுதற் குத்துணை வெண்மதிப்
பாதி யென்பது வையம் பகருமாற்
கோதி லாமுடிக் கோலமுங் கோதிலார்
நீதி நூலி னிகழ்த்திய வண்ணமே. (௩௮)

2663 வழிந்த தேன்மகிழ் மார்பனைச் சூழ்ந்துபார்
பொழிந்த காதவிழ் போதுட னுசிகண்
மொழிந்து தேவர் பொழிமலர் மூன்றெனக்
கழிந்த காவகம் வாசங் கமழுமே. (௩௯)

2664 அந்த ணாள ரருமறை யுட்கொளுஞ்
சிந்தை யானுதித் தேசிறப் பெய்தலும்
இந்த மாடமந் தாமத் திருந்திவண்
வந்த மாடமென் பார்மங்கை மார்களே. (௪௦)

2665 குலக்கொ முந்தைக் கொடியிடை யார்முலைத்
தலத்த ணைப்பர் முகப்பர் தலைக்கொள்வார்
நலத்த கைத்திரு நாரண னுமென்பார்
நிலத்தி ருத்து நினைவிழந் தார்களே. (௪௧)

2666 றூல தென்ன நுடங்கு நுசுப்பினர்
கோல மார்பத் தணைப்பக் குழகன்மென்
கால்பொ ரக்கதிர் மாமுலைக் கண்வழி
பால்ப னிற்றி நிலத்திற் பாந்தவே. (சஉ)

2667 ஏன மொன்றன் றழுதெழு பாரையும்
போன கஞ்செய் துமிழ்ந்தளக் கும்பொறை
ஞான பூரண நாதனை யுன்னிவாழ்
மோன மன்றி மதலை முழங்கிலான். (சந)

2668 கலக வஞ்சகக் கஞ்சனென் பான்விடும்
அலகை மாமுலை யுண்டத னுயுவுண்
டுலக முண்டவ னுள்ளமுண் டான்குலத்
திலக னங்கை திருமுலை யுண்கிலான். (சச)

2669 வெள்ளத் தாலிலை மேற்றுயில் வித்தக
வுள்ளத் தானை யுணர்வெனுங் கண்ணினுட்
கொள்ளப் பார்வை குறிப்பதல் லாற்புறக்
கள்ளத் தால்வருங் காட்சிகள் காண்கிலான். (சரு)

2670 ஒப்பி லாமணி யொன்றினைக் கைவலான்
கப்பு விட்டொப்ப மிட்டுக் கழுவியே
வைப்ப வொண்சுடர் தூண்டு வனப்பெனச்
செப்ப மேயது செய்யபொன் மேனியே. (சசு)

2671 காழி யன்றவை வேல்விழிக் கன்னிமார்
ஆழி யங்கைக் கடவுளுக் கன்பனே
ஊழி யூழி யுகந்தொறு நின்புகழ்
வாழி வாழியென் றின்புற வாழ்த்தினர். (சஎ)

வேறு

2672 திங்க ளிரண்டுபுகுந் தெய்வத் தனிச்சுடரை
நங்கை திருவயிற்றில் வந்துதித்த நன்மணியை
அங்கண் வழுதிவள நாடர்குலத் தாமரைதை
யெங்கள் பெருமானை யெம்பெருமான் காக்கவே.
யேனோர்க்கும் பெம்மானை யெம்பெருமான் காக்கவே. (சஅ)

20 கோடிமே லிடபமுங் கோவணக் கீளுமோர் கொக்கிறகும்
அடிமேற் கழலு மகலத்தி னீறுமை வாயரவு
முடிமேன் மதியு முருகலர் கொன்றையு மூவிலைய
வடிவேல் வடிவுமென் கண்ணுளெப் போதும் வருகின்றவே.

பதவுரை:—கொடிமேல் இடபமும் - கொடியில் விடையும், கோவணக் கீளும், ஓர் கொக்கிறகும் - ஒரு கொக்கிறகும், அடிமேற் கழலும் - அடியில் வீரக்கழலும், அகலத்தில் நீறும்—மார்பில் வெண்ணீறும், முடிமேல் ஐவாய் அரவும் - முடியில் ஐந்துவாயையுடைய பாம்பும், மதியும் - சந்திரனும், முருகு அலர் கொன்றையும் - மணங்கமழ்கின்ற கொன்றைமாலையும், மூவிலைய வடி வேல் வடிவும் - மூன்று இலைவடிவத்தையுடைய வடித்த சூலப்படையும், என் கண்ணுள் எப்போதும் - வருகின்ற - என் கண்ணில் எப்போதும் தோன்றுகின்றன.

குறிப்புரை:—இறைவன் நாயனாரின் கண்ணைவிட்டகலானென்பது இதனாற் பெறப்பட்டது. மூவிலைய வடிவேலென்றது திரிசூலத்தை.

21 வருகின்ற மூப்பொடு தீப்பிணிக் கூற்றம்வை கற்குவைகல்
பொருகின்ற போர்க்கொன்று மாற்றகில் லேன்பொடி பூசிவந்துன்
அருகொன்றி நிற்க வருளுகண் டாயழல் வாயரவம்
வெருகொன்ற வெண்மதி செஞ்சடை மேல்வைத்த வேதியனே.

பதவுரை:—அழல்வாய் அரவம் - தீயைக் கக்குகின்ற வாயையுடைய பாம்பை, வெருகொன்ற வெண்மதி செஞ்சடைமேல் வைத்த வேதியனே - பகையொழிந்த வெண்மையாகிய சந்திரனுடன் சிவந்த ஜடாபாரத்தில் தரித்த வேதமுதல்வனாகிய சிவனே!, வைகற்குவைகல் வருகின்ற மூப்பொடு தீப் பிணிக் கூற்றம் - என்றும் வருகின்ற வார்த்திகத்தினுடன் கொடியநோயும் யமனும், பொருகின்ற போர்க்கு ஒன்றும் ஆற்றகில்லேன் - (என்னோடு) இடு கின்ற சமரினுக்குச் சிறிதும் வன்மையுடையேனல்லேன், பொடிபூசிவந்து உன் அருகு ஒன்றி நிற்க அருளு - திருநீற்றைத் தரித்துவந்து உனது சமீபத் திற்பொருந்திநிற்கக் கருணைசெய்வாயாக.

குறிப்புரை:—பாம்பும் மதியும் இறைவன்சந்நிதானவிசேடத்தால் பகைமை தீர்ந்தமையால், "அழல்வாயரவம் வெருகொன்றவெண்மதி செஞ் சடைமேல்வைத்த வேதியனே" என்றார். இதனைப், "பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்", "தேனுங் குழலும் பிழைத்த திருமொழியாள் புலவி தீர்க்க மதி தானும் பணியும் பகைதீர்க்குஞ் சடையார்" என்னும் ஆன்றோர் வாக்குக்களாலும் அறிக. வெண்மை செம்மை சொன்முரண். கண்டாய்

முன்னிலையசைச்சொல். இன்னகாலத்து இன்னது எய்தவருதல் வினையின் இயல்பாகலின், 'வைகற்குவைகல்' என்றார். கூற்றம்-சொல்லால் அஃறிணை. வெருகொன்ற என்பதற்கு அஞ்சுதல் பொருந்திய என்பாரும் உளர்.

22 வேதியன் பாதம் பணிந்தேன் பணிந்துமெய்ஞ் ஞானமென்னும்
சோதியென் பால்கொள்ள வுற்றுநின் றேற்கின்று தொட்டிதுதான்
நீதியென் றன்செல்வ மாவதென் றேன்மே னினைப்புவண்டேர்
ஓதிநின் போல்வகைத் தேயிரு பாலு மொழித்ததுவே.

பதவுரை:—வேதியன்பாதம் பணிந்தேன் - அந்தணனாகிய சிவனாரது திருவடிகளைத் தொழுது வணங்கினேன், பணிந்து - வணங்கி, மெய்ஞ்ஞானமெனும் சோதி - உண்மைஞானமெனப்படும் அருட்பிரகாசத்தை, என்பால் கொள்ள உற்று நின்றேற்கு - என்பாற் பொருந்த அடைந்துநின்ற எனக்கு, இன்றுதொட்டு - இன்றுமுதல், இதுதான் நீதி என்றான் - இதுவே நீதியாவதென்றான், செல்வயாவதென்றேன் - அதற்கு யான் செல்வம்யாது? என்றேன், வண்டேர் ஓதி! - வண்டினை அழகுசெய்கின்ற கூந்தலையுடையாய்!, நின்போல்வகைத்து - நின்போல் வகுக்கப்பட்ட அவளென்பதும், இருபாலும் ஒழித்தது - அவனென்பதும் அதுவென்பதும் ஆகிய இப்பாகுபாட்டை ஒழித்துநிற்பது, மேல்நினைப்பு - மேலான நினைப்பு என்றனன்.

குறிப்புரை:— இறைவனை 'அந்தணர்மாட்டருந்தெய்வம்' என்பவாகலின் 'வேதியன்' என்றார். 'வேதியாவேதகீதா', "ஆவியுளாவியானேன் அந்தணனதியென்றே - ஏவரை யிசைத்த வம்மா எல்லையின் மறைகளெல்லாம்" என்பவை காண்க. இருபால் என்றது அவன் அது என்பவற்றை. 'மேனினைப்பு' என்றதற்கு இனி எய்தும் நினைப்பு எனினும் அமையும். செல்வம் என்பது அருட்செல்வத்தை. அவன் அவள் அது என்னுஞ் சுட்டுப்போதங் கழன்றுநிற்றலை "நின்போல்வகைத்தே இருபாலுமொழித்ததுவே" என்று கூறினார். "பெண்ணலல்ல ஆணல்லை பேருமல்லை பிறிதல்லை" என்பது தேவாரம். மெய்ஞ்ஞானம் - சிவாநுபவம் "சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம், பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்" (பெரியபுராணம்)

23 ஒழித்தேன் பிறவியை யூர்ந்தே னுவகையை யோங்கிற்றுள்ளம்
இழித்தே னுடம்பினை யேலேன் பிறரிடை யிம்மையும்
பழித்தேன் பழியே விளைந்தம்பந் சேந்தியத் தூந்சரமும்
தெழித்தேன் சிவனடி சேர்ந்தே னினிமிகத் தெள்ளியனே.

பதவுரை:—பிறவியை ஒழித்தேன் - மீண்டும் மீண்டும் வந்து பிறத்தலை நீங்கினேன், உவகையை ஊர்ந்தேன் - ஆசையை விட்டேன், உள்ளம் ஒங்கிற்று - மனம் தெளிந்தது, உடம்பினை இழித்தேன் - யாக்கைநிலையாமையையுணர்ந்து உடற்பற்றுநீங்கினேன், பிறரிடை ஏலேன் - பிறர்பாற்சென்று இரக்கமாட்டேன், இம்மனையும் பழித்தேன் - இவ்வில்வாழ்க்கையையும் இகழ்ந்தேன், பழியேவிளைக்கும் பஞ்சேந்திரியக்குஞ்சரமும் தெழித்தேன் - துன்பத்தினையேவிளைக்கும் ஐம்புலன்களாகிய யானைகளையும் அடக்கிநின்றேன், சிவனடிசேர்ந்தேன் சிவபிரானது சீர்பாதங்களை அடைந்தேன், இனி மிகத் தெள்ளியனே - இனி மிகத் தேர்ச்சியுடையவனுவேன்.

குறிப்புரை:—மனையென்றது மனையறத்தை, ஆகுபெயர். சிவனடிசேர்ந்தேன் இனி மிகத் தெள்ளியன் என்றது, "இறுமாந்திருப்பன்கொலோ - ஈசன்பல்கணத்தெண்ணப்பட்டுச், சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச்சென்றங், கிறுமாந்திருப்பன்கொலோ" என்னும் அப்பர்தேவாரத்தை நினைப்பூட்டுகின்றது. சேர்தலாவது — இடைவிடாது நினைத்தல், "பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" என்னும் திருக்குறளும் இங்கே சிந்திக்கற்பாலது.

24 தெள்ளிய மாந்தரைச் சேர்ந்திலேன் தீங்கவி பாடலுற்றேன்
ஒள்ளிய சொல்லும் பொருளும் பெறேனுரைத் தாருரைத்த
கள்ளிய புக்காற் கவிகளோட் டார்கட னஞ்சயின்றாய்!
கொள்ளிய வல்லகண் டாய்புன்சொ லாயினுங் கொண்டருளே.

பதவுரை:—தெள்ளிய மாந்தரை - கல்விகேள்விகளிற் சிறந்த மக்களை, சேர்ந்திலென் - அடையேன். தீங்கவி பாடலுற்றேன் - இனிமையுள்ள கவிகளைப் பாடத்தொடங்கினேன். ஒள்ளிய சொல்லும் பொருளும் பெறேன் - நல்லசொற்களையும் கருத்தையும் பெறுதலைச்செய்யேன். உரைத்தார் உரைத்த - சொல்லப்பட்ட கவிஞராற் கூறப்பட்டவற்றை, கள்ளியபுக்கால் - வஞ்சித்துப் பாடத்தொடங்கின், கவிகள் ஒட்டார் - கவிகள் இசயார், கடல் நஞ்சு அயின்றாய் - கடலிற்பிறந்த விஷத்தையுண்ட சிவபிரானே! கொள்ளிய வல்ல புன்சொலாயினும் கொண்டருள் - யான் பாடுவன நின்னாற் கொள்ளத் தக்கன அல்லவாய் இழிந்தசொற்களாயினும் ஏற்றுக்கொள்வாயாக.

குறிப்புரை:—'உரைத்த' எனச் செய்யப்படுபொருள் வினைமுதல்போற் கூறப்பட்டது. கவிகள் என்பது ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் வன்கவிபாடுவோரை. தன்னை வழிபாடுசெய்யாதார்பொருட்டு

விடமுண்டவனாகலின் என்கவியுங்கொள்வானென்பது. திங்கவி என்றது நவரசங்கலந்த பாவினை. தெள்ளியமாந்தரென்றது புரைதீர்ந்த கல்வி கேள்வியுடையாரை. உரைத்தாரென்றது மெய்ப்பனுவல்வல்லாரை. புன்சொல் - பயனற்றசொல். "மென்சொ லேனும் வெளிற்றுரை யேனும்வீண், புன் சொலேனுமிகழார் புலமையோர்" என்ற கந்தபுராண அடிகள் சிந்திக்கற் பாலன.

25 அருளால் வருநஞ்ச முண்டுநின் றயை யமரர்குழாம்
பொருளார் கவிசொல்ல யானும்புன் சொற்கள் புணர்க்கலுற்றேன்
இருளா சறவெழின் மாமதி தோன்றவு மேன்றதென்ன
வெருளா தெதிர்சென்று மின்மினி தானும் விரிகின்றதே.

பதவுரை:—வரும் நஞ்சம் - கடலில் உண்டான விடத்தை, அருளால் உண்டு நின்றாயை - இரக்கம் காரணமாகப் பருகிநின்ற நின்னை, அமரர் குழாம்-தேவர்கூட்டம், பொருள் ஆர் கவி சொல்ல-பொருளிற்சிறப்புவாய்ந்த கவி பாட, யானும் புன்சொற்கள் புணர்க்கலுற்றேன் - யானும் பயனற்ற சொற்களால் தொடுக்கத்தொடங்கினேன், (தொடங்கின இது,) இருள் ஆசு அற - இருளாகிய குற்றம் ஒழிய, எழில் மா மதி தோன்றவும் - அழகினை யுடைய பூரணசந்திரன் உதிக்கவும், என்றதென்ன - அதற்கு இணையாக, வெருளாது பயப்படாமல், எதிர்சென்று - (அம்மதியின் எதிரே போய், மின்மினிதானும் விரிகின்றதே — மின்மினிப்பூச்சியும் பறந்துநின்றது போலும்.

குறிப்புரை:—தேவர்கள் தம்மைக் கொல்லவந்த ஆலகாலவிஷத்தை யுண்டு காக்கத் துதிசெய்தமையால் 'பொருளார்கவிசொல்ல' என்றார். தான் பாடும் கவி பொருளில் வெறுங்கவியாதலால், 'புன்சொற்கள் புணர்க்க லுற்றேன்' என்றார். இது, 'முழுமதிநேர்பின்று மின்மினிதானும் விரிகின்ற தொக்கும்' என உவமைமுகத்தானும் விளக்கியவாறென்க.

"கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
ஆலால முண்டா னவன்சதுர்தா னென்னேடி
ஆலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ"

என்னும் திருவாசகம் விடபானத்தின்சிறப்பைக் கூறுவது. விஷபானத்தைக் குறிக்கும் தேவாரப்பாக்கள் அளப்பில. 'ஆலந்தானுகந் தமுதுசெய்தானை' என்பது (அவற்றுள்) ஒன்று.

26 விரிகின்ற ஞாயிறு போன்றது மேனியஞ் ஞாயிறுசூழ்ந்
தெரிகின்ற வெங்கதி ரொத்தது செஞ்சடை யச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது கண்டமக் காரிருட்கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுள தாலெந்தை யொண்பொடியே.

பதவுரை:—மேனி விரிகின்ற ஞாயிறுபோன்றது - வடிவம் பிரகாசிக்கின்ற (கதிரையுடைய) சூரியனை ஒத்தது, செஞ்சடை அஞ்ஞாயிறு சூழ்ந்து எரிகின்ற வெங்கதிர் ஒத்தது - சிவந்த சடை அச்சூரியனைநெருங்கி எரியாநின்ற வெம்மையுடைய கிரணங்களை ஒத்தது, கண்டம் அச்சடைக்கீழ்ச் சரிகின்ற காரிருள் போன்றது - கழுத்து அச்சடையின்கீழ் இழிகின்ற கருமையாகிய இருளையொத்தது, எந்தை ஒண்பொடி - எம் ஐயனது அழகிய திருநீற்றுக்கோலம், அக் காரிருட்கீழ்ப் புரிகின்ற வெண்முகில் போன்றுளது - அக் கருமையாகிய இருளின்கீழ் விரும்பியடைகின்ற வெண்மைவாய்ந்த மேகம் போல் இருக்கின்றது.

குறிப்புரை:—மேனி ஞாயிற்றையும், செஞ்சடை அதன் கதிரையும், கண்டம் அதைக்கண்டு சரிகின்ற இருளையும், ஒண்பொடிக்கோலம் அவ்விருளின்கீழ் விரும்பியடையும் வெண்முகிலையும் ஒக்கின்றன எனக் கூட்டி முடிக்க. இது பலவயிற்போலியுவமையணி.

27 பொடிக்கின் றிலமுலை போந்தில பற்சொற் பொருடெரியா
முடிக்கின் றிலள்குழ லாயினுங் கேண்மின்கண் மூரிவெள்ளம்
குடிக்கொண்ட செஞ்சடைக் கொண்டலங் கண்டன்மெய்க் கொண்டணிந்த
கடிக்கொன்றை நாறுகின் றாளறி யேன்பிறர் கட்டுரையே.

பதவுரை:—முலை பொடிக்கின்றில-முலைகள் அரும்பில, பல் போந்தில-பற்கள் முளைத்தில, சொற்பொருள் தெரியா - சொற்களின்பொருள் விளக்கமறியா, குழல் முடிக்கின்றிலளாயினும் - கூந்தலைமுடிக்க அறிந்திலளாயினும், மூரிவெள்ளம் குடிக்கொண்ட செஞ்சடைக் கொண்டலங் கண்டன் - பெருவெள்ளமாகிய கங்கைதங்கிய செஞ்சடையையும் கார்போலும் கரிய கழுத்தையும் உடைய சிவபெருமான், மெய்க்கொண்டணிந்த கடிக்கொன்றை நாறுகின்றாள் - (தன்) உடம்பிற்கொண்டு சாத்துகின்ற கொன்றைமாலை மணம் கமழ்கின்றாள், பிறர் கட்டுரை அறியேன் - பிறர்கூறும் உறுதிமொழியை அறியமாட்டேன்.

குறிப்புரை:—குடிக்கொண்ட என்பது விரித்தல்பெற்றது. பொடிக்கின்றில, போந்தில, பொருள்தெரியா, முடிக்கின்றிலள் எனக் கூறினமையான் பாங்கி தலைவனை (த் தலைவியின்) இளமைத்தன்மைகூறி மறுத்தவாறு.

'சொல் பொருள் தெரியா' என்றது பொருள்புணராத மழலைச்சொல்லை. கட்டுரை பண்புத்தொகை. கேண்மின்கள் முன்னிலையசை. கங்கை வெள்ளப் பெருக்குள்ளதென்பது, "கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கையாயிரமா முகத்தினொடு வானிற்றோன்றும் - புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்" என்னும் தேவாரத்தால் அறியலாம்.

28 உரைவளர் நான்மறை யோதி யுலக மெலாந்திரியும்
விரைவளர் கொன்றை மருவிய மார்பன் விரிசடைமேற்
றிரைவளர் கங்கை நுரைவளர் தீர்த்தஞ் செறியச்செய்த
கரைவளர் வொத்துள தாற்சிர மாலையெங் கண்டனுக்கே.

பதவுரை:—உரைவளர் நான்மறை ஓதி - சொல்வளரப்பட்ட நான்கு வேதங்களையும் ஓதி, உலகமெல்லாம் திரியும் - உலகமுழுதும் திரியாநிற்கும், விரைவளர் கொன்றை மருவியமார்பன் - மணங்கமழ்கின்ற கொன்றைமாலை தங்கிய மார்பையுடையவனாகிய, எம் கண்டனுக்கு எமது நீலகண்டனாகிய சிவபிரானுக்கு, விரிசடைமேல் நுரைவளர் கங்கை திரைவளர் தீர்த்தம் - விரிந்த சடையின்மேல் நுரைதங்கிய கங்கையின் அலைபெருகிய தீர்த்தத் திற்கு, செறியச்செய்த கரை வளர்வு - கட்டிய செய்கரையின் வளர்ச்சியை, சிரமாலை ஒத்துளது - தலைமாலை ஒத்திருக்கின்றது.

குறிப்புரை:—எழுதாக்கிளவியாதலின் 'உரைவளர்நான்மறை' என்றார். 'நான்மறை' என்புழி முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. தீர்த்தத்துக்கு என்னும் நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது; 'ஐந்தவித்தானாற்றல்' என்புழிப் போல. கொன்றைமாலையின் விசேடம், "கொங்கலரும் நறுங் கொன்றைத்தாராய்போற்றி" என்று தேவாரத்திற் கூறப்பட்டுளது. வேத மொழியர், வேதகீதர் முதலிய பெயர்கள் சிவபிரானுக்கு அருட்பாக்களில் வழங்கப்படுகின்றன.

29 கண்டங் கரியன் கரியீ ருரியன் விரிதருசீர்
அண்டங் கடந்த பெருமான் சிறுமான் தரித்தபிரான்
பண்டன் பரம சிவனோர் பிரமன் சிரமரிந்த
புண்டங் கயிலன் பயிலார மார்பனெம் புண்ணியனே.

பதவுரை:—கண்டம் கரியன் - கருநிறமுள்ள கழுத்துடையான், கரியீருரியன் - யானையின் தோலை ஆடையாயணிந்துள்ளவன், விரிதருசீர் அண்டம் கடந்த பெருமான் - விரிந்த சிறப்பினையுடைய அண்டங்கட்கெல்லாம் அப்பாற்பட்டவன், சிறுமான் தரித்தபிரான் - சிறியமானைக் கையிலேந்திய பெருமான், பரமசிவன் - பரமபதியாகிய சிவபிரான், பண்டு பிரமன் ஓர்

சிரம் அரிந்த - முன்னாளில் பிரமனுடைய தலைகளுள் ஒன்றை அறுத்த புண் தங்கு அயிலன் - புண் தங்கிய சூலப்படையையுடையவன், ஆரம் பயில் மார்பன் - என்புமாலைகள் பூண்ட மார்புடையான், எம் புண்ணியன் - (அவன்) எமது புண்ணியசொரூபியாம்.

குறிப்புரை:—'அண்டங்கடந்த பெருமான்' என்பதற்கு 'அண்டங்களைத் தந்த பெருமான்' என்று உரைப்பினும் ஆம். பிரமன்சிரங்கொய்தமை சூலப் படையாலாகலின், 'புண்டங்கயிலன்' என்றார். 'பண்டன்' என்பதில் அன் சாரியை. பிரமன்சிரங்கொய்தமை சிவபிரானது அட்டவீரட்டத்துள் ஒன்று. "பரமனை மதித்திடாப் பங்க யாசனன், ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர், குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன், புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்" என்னும் வைரவர்தோத்திரம் இங்கே நோக்கத்தக்கது. யானைத்தோல் போர்த்தது, "மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி" என்னும் தேவாரத்தால் அறியலாம்.

30 புண்ணியன் புண்ணியல் வேலையன் வேலைய நஞ்சனங்கக்
கண்ணியன் கண்ணிய னெற்றியன் காரணன் காரியங்கும்
விண்ணியன் விண்ணியல் பாணியன் பாணி கொளவுமையாள்
பண்ணியன் பண்ணியல் பாடல னாடல் பசுபதியே.

பதவுரை:—புண்ணியன் - புண்ணியசொரூபி, புண்ணியல்வேல் ஐயன் - புண் தங்கிய சூலப்படையை யுடையான், வேலைய நஞ்சன் - கடலிற்பிறந்த விஷமுண்டவன், அங்கக் கண்ணியன் - என்புமாலையையுடையவன், கண் இயல் நெற்றியன் - கண்பொருந்திய நெற்றியையுடையவன். காரணன் - உலகத்துக்கு நிமித்தகாரணன், கார் இயங்கும் விண்ணியன் - மேகந் தவழும் ஆகாயமுடையவன், விண் இயல் பாணியன் - ஆகாசத்தில் தங்கிய கங்கையையணிந்தவன், உமையாள் பாணிகொள பண்ணியன் - உமையம்மை நிருத்தங்காணப்பண்ணியவன், பண் இயல் பாடலன் - பண்ணுக் கியன்ற பாட்டைப்பாடுபவன் (ஆகிய) பசுபதியே - சிவபிரானையே, நாடல் நீ நாடு.

குறிப்புரை:—புண்ணியன் - அறவாழியந்தணன். 'புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்' என்பது அப்பர்தேவாரம். கண் இயல் நெற்றியன் - நெற்றிக்கண்ணன். நாடல் அல்லீற்று வியங்கோள். எவ்வுயிர்க்கும் இறைவனாகலிற் 'பசுபதி' என்றார் 'பசு' என்றது மூன்றுவகைப் பசுக்களை; இதனை "மூவகையாருயிர்வர்க்கம்" என்பதனால் அறிக. பசுபதியென்னும் பெயர் சிவபிரானுக்கேயுரியது. அவர் ஒருவரே பசுபதி (பசுக்களுக்குப்பதி). பசு - ஆன்மா. பதி - தலைவன். "பசுபதிப்பெயரிய தனிமுதற்கடவுள்" என்பதை நோக்குக.

31 பதியார் பலிக்கென்று வந்தா ரொருவர்க்குப் பாவைநல்லீர்
கதியார் விடையுண்டு கண்மூன் றுளகறைக் கண்டமுண்டு
கொதியார் மழுவுண்டு கொக்கரை யுண்டிறை கூத்துமுண்டு
மதியார் சடையுள மாலுள தீவது மங்கையர்க்கே.

பதவுரை:—பாவைநல்லீர்!—பதுமைபோன்ற மாதர்களே!, பதியார் பலிக்கென்று வந்தார் ஒருவர்க்கு - பதியிற்பொருந்திப் பிச்சையென்றடைந்த சிவபிரானுக்கு, கதியார்விடையுண்டு வேகமாகச்செல்லும் இடபம் உண்டு, கண் மூன்று உள - கண்கள் மூன்றுள, கறைக்கண்டம் உண்டு - களங்கம் தங்கிய கண்டம் உளது, கொதியார் மழு உண்டு-எரியும் மழுப்படை உண்டு, கொக்கரை உண்டு - கொக்கரைக்கூத்து உளது, இறை கூத்தும் உண்டு - சிறிது கூத்துப்பயில்வதும் உண்டு, மதி ஆர் சடை உள - நிலாக்கண்ணி யணிந்த சடையும் உண்டு, மங்கையர்க்கு ஈவது மால் உளது - மாதர்களுக் குக் கொடுப்பதாகிய மயக்கமும் உண்டு.

குறிப்புரை:—உளது என்பதில் துவ்வீறு தொகுக்கப்பட்டது. பாவை-பதுமை. வந்தார் வினையெச்சமுற்று. கொக்கரையென்றது இறைவன் கூத்தின் ஒரு விசேடம். 'இடபகதி' என்பதனால் 'கதியார் விடையுண்டு' என்றார்.

32 மங்கைகொங் கைத்தடத் திங்குமக் குங்குமப் பங்கநுங்கி
அங்கமெங் குந்நெகச் சங்கமங் கைத்தலத் துங்கவர்வான்
கங்கைநங் கைத்திரைப் பொங்குசெங் கண்ணர வங்கள்பொங்கிப்
பங்கிதங் கும்மலர்த் திங்கள்தங் கும்முடிப் பண்டங்கனே.

பதவுரை:—கங்கைநங்கைத்திரை-கங்கையாகிய நங்கையினது அலையின் கண், பொங்கு செங்கண் அரவங்கள் - மிகச்சிவந்த கோபக்கண்களையுடைய பாம்புகள், பொங்கி - மிகுந்து, பங்கி தங்கும் - கேசத்திற்றங்குகின்ற, மலர்த் திங்கள் தங்கும் முடிப் பண்டங்கன் - மலர்மாலைபோன்ற மதியம் தங்கிவாழும் முடியினையுடைய பாண்டரங்கக்கூத்தனுகிய சிவபிரான், மங்கை கொங்கைத்தடத்து அக்குங்குமப் பங்கம் நுங்கி - மாதின் முலைத்தடத்து அக் குங்குமச்சேறளைந்து. இங்கும் அங்கமெங்கும் நெக - இங்கும் உடம் பெங்கும் தளர, அம் கைத்தலத்தும் சங்கம் கவர்வான் - அழகிய கையினின் றும் வளைகவராநிற்பான்.

குறிப்புரை:—பண்டங்கன் கவர்வான் என்று இயைக்க. பாண்டரங்கன் என்றது பண்டங்கன் என நின்றது. இதனை, "பலிதிரிந்துழல் பண்டங்கன் மேய வையாற்றனை" என்ற சம்பந்தர்தேவாரத்தானும் உணர்க. பாண்டரங்கம் என்பது, "தேர்முன் நின்ற திசைமுகன் காணப், பாரதி யாடிய வியன்பாண்டரங்கமும்" என்றதனான் அறிக.